BP/39

**SECONDARY SCHOOL**

# END - OF - YEAR EXAMINATION - 2017

# TAMIL LANGUAGE PAPER

## SECONDARY 3 EXPRESS / 3NA

FRIDAY

2 HOURS
(1100-1300)

## INSTRUCTIONS TO CANDIDATES

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்து கொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2. தேர்வு எழுதுவதற்கு முன்னர் விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையில் உமது பெயரையும், வகுப்பையும், வரிசை எண்ணையும் தெளிவாக எழுதவும்.

3. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப் புத்தகத்தில் எழுத வேண்டும்.

This question paper consists of 8 printed pages including the Cover Sheet

**SECONDARY 3 EXPRESS**

**SECONDARY 3**
**SET 4 /15**

More papers at www.testpapersfree.com

# தமிழ்
# தாள் 2

நேரம் 1.30 மணி

உயர்நிலை3

மதிப்பெண்கள் 70

## "அ" பிரிவு

A1. மரபுத்தொடர்கள், இணைமொழிகள் ( 10 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q1. சிங்கப்பூரில் நடைபெற்ற ஓவியப்போட்டியில் என் ஓவியம் முதல் பரிசைப் பெற்றது என்பதைக் கேட்ட போது என் ______________________.

Q2. சென்ற ஆண்டு காற்பந்துப்போட்டியில் தங்களை வென்ற குழுவை இந்த ஆண்டு கட்டாயம் வென்று விடுவோம் என்று குமரனும் அவன் குழுவினரும் ______________________.

Q3. விலைவாசிகள் அதிகமாக ஏறிவிட்டதால் குமரன் செய்த வாணிகத்தில் ______________________ நிலை ஏற்பட்டது.

Q4. கடந்த ஆண்டு மாலன் இணைப்பாட நடவடிக்கைகளை ______________________ செய்ததால் இந்த ஆண்டு அந்நடவடிக்கையின் தலைமைப் பதவி அவனுக்கு வழங்கப்பட்டது.

Q5. பல நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்த முகிலன் ______________________ காணப்பட்டான்.

| | |
|---|---|
| 1) ஒட்டிஉலர்ந்து | 6) தலைமேற்கொண்டு |
| 2) சீரும் சிறப்புமாய் | 7) கையைக்கடிக்கும் |
| 3) உச்சிகுளிர்ந்தது | 8) கழித்துக்கட்டியதால் |
| 4) சூளுரைத்தனர் | 9) இளைத்துக்களைத்து |
| 5) கைகொடுக்கும் | 10) கொட்டமடித்தனர் |

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

A2. வாக்கியங்களை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப் பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.

உமது விடைகளை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q6. ஆண்டுதோறும் நமது அரசாங்கம், மாணவர்கள் கலைகளைக் கற்றுக் கொள்ள பல ஆயிரம் வெள்ளிகளைச் செலவிடுகிறது.

நமது அரசாங்கத்தால் ______________________________.

Q7. நிலநடுக்கத்தால் அதிகப் பாதிப்பு ஏற்படாமல் இருக்கக் கட்டடங்களை மிக உறுதியாகக் கட்ட வேண்டும்

கட்டடங்கள் உறுதியாகக் கட்டப்படவில்லையென்றால்______________________.

Q8. ஒருவனிடம் முயற்சியில்லை என்றால் அவன் கல்வியைக் கற்க முடியாததோடு நல்ல வேலையையும் பெற முடியாது.

ஒருவன் நல்ல வேலையைப் பெறவும் ______________________________.

Q9. பாரதியார் தம் பாடல்களின் வழி மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் வளர்த்தால் மக்கள் மனதில் இடம் பெற்றார்.

மக்கள் மனதில் பாரதியார் இடம் பெற ______________________________.

Q10. கடந்த ஆண்டு தேர்வில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றவர்கள் இந்த ஆண்டு பரிசளிப்பு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டனர்.

இந்த ஆண்டு பரிசளிப்பு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டு______________.

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

"ஆ" பிரிவு

B3. அமைப்புச்சொற்கள் ( 10 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள், பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

பாரதியார் கவிதை எழுதுவதில் பெருவிருப்பு கொண்டிருந்தார். ஆனால் மனித மேம்பாட்டை Q11______________ நோக்கமாகக் கொள்ளவில்லை. கவிதையின் வழி மனித மனங்களை மாற்ற முடியும் என்பதில் அவருக்குQ12______________ நம்பிக்கையிருந்தது. எனவே தம் பாடல்களில் நாட்டுப்பற்றையும், நீதி நெறிக் கருத்துகளையும் எடுத்துக் கூறுவதில் அவர் அதிக அக்கறை காட்டினார். அவருடைய பாடல்கள் Q13______________ எளிமையானவை; இனிய சொற்களைக் கொண்டவை. அவர் இயற்கையையும் இரசித்துப் பாடியுள்ளார் என்பதை அவரது குயில்பாட்டின் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

வாழ்க்கை நம்பிக்கையின் அடிப்படையில் அமைவதாகும். ஆனால் மூடநம்பிக்கைகள் கூடாது என்று அவர் தம் பாடல்களில் பல இடங்களில் எழுதியுள்ளார். அவை வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குQ14 ______________ உள்ளன. மூடநம்பிக்கைகள் சமூக வேற்றுமைகளைத் தூண்டிவிட்டு நாட்டின் வளர்ச்சியைக் குலைத்துவிடும். எதிர்காலத்தில் Q15 __________ கூடியவற்றை அவர் தீர்க்கமாக உணர்ந்து தம் பாடல்களில் வெளியிட்டுள்ளார். அதற்கு எடுத்துக்காட்டாக, "காசியில் பேசுவதைக் கேட்க காஞ்சியில் ஓர் கருவி அமைப்போம்." என்ற வரியைக் குறிப்பிடலாம்.

| | |
|---|---|
| (1) மேற்கொள்ள | (2) மட்டும் |
| (3) அனைத்தும் | (4) அடிப்படைகளாக |
| (5) தடைகளாக | (6) சில |
| (7) ஒருபோதும் | (8) உறுதியான |
| (9) மிகவும் | (10) நடக்க |

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

## "இ" பிரிவு

C4 தெரிவுவிடைக் கருத்தறிதல் ( 10 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு விடை தருக.

அறிவைத் தேடிக்கொள்ள நமக்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. (நாம் கண்ணால் காண்பதிலிருந்தும், காதால் கேட்பதிலிருந்தும் பிறருடைய செயல்களைக் கூர்ந்து கவனிப்பதிலிருந்தும், நாமே பயிற்சியை மேற்கொள்வதிலிருந்தும், நூல்களை வாசிப்பதின் மூலமும் நாம் அறிவை வளர்த்துக் கொள்கிறோம். இத்துடன் நில்லாது சுயமாகப் பெறும் அனுபவ அறிவையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவையே நம்முடைய (சிந்தனைக்கு ஆற்றல் தரும் உன்னத வழிகாட்டிகளாகும்.)

அறிவைப் பெறுவதற்குத் தான், நாம் கல்வி நிலையங்களுக்குச் சென்று கற்கிறோம். கல்வியறிவு தனிமனிதனையும் அவனது சமுதாயத்தையும் பாதிக்கிறது. கல்வி கற்றவனுக்குச் சமூகத்தைப் பற்றிய உணர்வு கட்டாயம் இருக்கும். கற்றவர் நிறைந்த சமுதாயத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் வெற்றி பெறும். அதனால் அச்சமுதாயம் முன்னேறுவது உறுதி. அதற்கு எதிர்மாறாகக் கல்வி கற்காதவர் அதிகம் நிறைந்த சமுதாயம் வெற்றி பெறுவது சந்தேகத்திற்குரியது.



**வினாக்கள்**

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q16. ஒருவரது சிந்தனை எப்போது வலுப்பெறும்?

1) தாமே முயன்று அனுபவம் பெறும்போது
2) தாமே மற்றவர்களின் செயல்களைக் கவனிக்கும்போது
3) பிறர் பேசுவதைக் கேட்கும் போது
4) அறிவை வளர்த்துக் கொள்ளும்போது

Q17. படிப்பதினால் ஏற்படும் விளைவு என்ன?

1) கற்றவர் நிறைந்த சமுதாயம் உருவாகும்
2) மேற்கொள்ளும் செயல்கள் யாவும் வெற்றியே பெறும்
3) ஒட்டு மொத்தமாகச் சமுதாயம் வளர்ச்சியடையும்
4) சமுதாயச் சிந்தனை அதிகரிக்கும்

More papers at www.testpapersfree.com

இயற்கையை ரசித்து விடலாம். ஆனால், அதை நன்கு உணர்ந்து ரசிப்பது என்பது சுலபமான காரியம் அல்ல. அதை ஞானத்தினால்தான் அறிய முடியும். மதுவிலும் இல்லாத பல மயக்கங்கள் இயற்கையில் உள்ளன. அதனால்தான் இயற்கையை ரசிப்பவன் கலைஞனாகிவிடுகிறான்.

இயற்கை என்பது நாம் கற்க வேண்டிய கல்வி. பெரும்பாலும் தனிமையில் அமர்ந்து பல கேள்விகளை எழுப்பிக்கொண்டே இருப்பவர்களுக்கு இது தானாக வந்துவிடுகிறது. எனவேதான் பாரதியை சிறு வயதிலேயே இயற்கை இணைத்துக்கொண்டது. பெரும்பாலும் சோலை, குளக்கரை, அந்திவேளையில் உயர்வான இடங்கள் என்று பாரதி தேடிச்சென்று கவிதைகளை உருவாக்குவதை வழக்கமாக வைத்திருந்தார். சிந்தனையும் இயற்கையும் இணையும்போதுதான் நல்ல கற்பனை பிறக்கிறது.

ஒரு இனிப்பை நம்மிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னால் அதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்து நன்கு மென்று அதன் சுவையை ரசித்துச் சாப்பிடும்போதுதான் நம் உணர்வில் சுவை தோன்றுகிறது. வாங்கியவுடன் வாயில் போட்டு விழுங்கிவிட்டால் ஒரு சுவையும் தெரியாது. அதுபோல் நாமும் இயற்கையில் உள்ள இன்பங்களைச் சுவைக்க முடியும்.

Q18. கடினமான செயலாகக் கூறப்படுவது எது?

1. இயற்கையை இரசிப்பது
2. இயற்கையை உணர்வது
3. ஞானத்தைப் பெறுவது
4. மயக்கத்தைத் தீர்ப்பது

Q19. கற்பனை எத்தகைய சூழலில் பிறக்கின்றது?

1. தனிமையில் அமைதியான சூழலில் இருக்கும்போது
2. மாலை வேளைகளில் உயர்வான இடத்தில் இருக்கும்போது
3. சோலை குளக்கரையில் இருக்கும் போது
4. இயற்கையும் சிந்தனையும் சேரும்போது

Q20. இயற்கை அழகை உணர்ந்தவர்கள் யார் என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார்?

1. இனிப்பை வாயில் போட்டு விழுங்கிவிடுபவர்கள்
2. இனிப்பை நன்கு மென்று சாப்பிடுபவர்கள்.
3. இயற்கையை இரசிக்கத் தெரியாதவர்கள்
4. மனதை இருக்கமாக்கிக் கொண்டவர்கள்

More papers at www.testpapersfree.com

D5 சுயவிடைக் கருத்தறிதல் (25 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை எழுதுக.

சிற்பக்கலை மனித இனம் தோற்றுவித்த கலைகளில் மிகச் சிறந்ததாகும். இது அற்புதமானது. இது காண்பவரின் உள்ளத்தில் பரவசத்தையும், அமைதியையும் ஏற்படுத்துகிறது. சிற்பிகளின் கைத்திறத்தால் சமைக்கப்பட்ட சிற்பங்கள் பன்னெடுங்காலம் நிலைத்து நின்று நாகரிகச் சின்னமாக, கலை கருவூலமாக போற்றப்பட்டு வருவதைக் காண்கிறோம். நுண்கலைகளுள் ஒன்றான இது படைத்தவரின் புகழை உலகம் உள்ள வரை பறைசாற்றிக் கொண்டிருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தமிழகம் சிற்பக்கலையின் உறைவிடம் என்று கூறலாம். தமிழ் நாடெங்கும் பல்லாயிரக்கணக்கான ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. அவை சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டடக்கலை ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றன. அவற்றில் காணும் சிற்பங்கள் யாவும் காலத்தால் எளிதில் அழிக்க முடியாத கல், உலோகம், மரம் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டவை ஆகும். அவை பண்டைக் காலப் பண்பாட்டுச் சிறப்புக்கள், தமிழர்களின் வாழ்க்கை முறை, கலை நுட்பங்கள் முதலியவற்றைப் புலப்படுத்துகின்றன. மேலும், அவை புராணக் கதைகளையும், இதிகாசக் கதைகளையும் நமக்கு எடுத்துச் சொல்கின்றன.

இவ்வரிய சிற்பங்களை உருவாக்குவது என்பது எளிதான செயலன்று. அவற்றைச் செதுக்கும் சிற்பி பல சீரிய நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்ந்தவராவர். ஆழ்ந்த புராண இதிகாச அறிவு, மனத் தூய்மை, கணித அறிவு, கைதேர்ந்த ஓவிய அறிவு ஆகியவை அவரிடம் இருக்க வேண்டும். மேலும் சோம்பலில்லாதவராய் எப்போதும் மன அமைதியுடன் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர் மனம் ஒரு நிலைப்பட்டிருக்கும். இக்குணநலன் பெற்ற ஒருவரால்தான் படைக்க வேண்டிய சிற்பத்தை வடிவத்துடன் செம்மையாகப் படைக்க முடியும் என்று அக்கால நூல்கள் கூறுகின்றன.

சிங்கப்பூரிலும் கோவில்கள் பல கட்டப்பட்டுள்ளன. அவற்றுள் மிக பழமை வாய்ந்தது சௌத் பிரிட்ஜ் சாலையில் உள்ள அருள்மிகு மாரியம்மன் கோவிலாகும். இது நாராயணப் பிள்ளை என்பவரால் அரும் முயற்சியால் 1827-இல் எழுப்பப்பட்டது. கலை அழகுடன் கூடிய இத்திருக்கோவில் மழைக் கடவுளான மாரியம்மனுக்காகக் கட்டப்பட்டது. பஞ்சபாண்டவர் கதையை எடுத்துரைக்கும் சிற்பங்கள் தமிழர்களின் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டுக்களாய் விளங்குகின்றன. இக்கோவிலின் மேற்கூரையில் காணப்படும் ஓவியங்கள் நடனக் கலைக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றன. சிங்கப்பூர் அரசின் வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக இந்தப் பழமையான ஆலயம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. தமிழர்களின் கலை நயத்தைச் சிங்கப்பூரில் எடுத்துக்காட்டும் சின்னமாக, இக்கோவில் திகழ்கிறது என்றே கூறலாம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

More papers at www.testpapersfree.com

<u>வினாக்கள்</u>

Q21.சிற்பக்கலையின் சிறப்பைக் கட்டுரையாசிரியர் எவ்வாறு சிறப்பித்துக் கூறுகிறார்? (5 மதிப்பெண்கள்)

Q22 தமிழகத்தைச் சிற்பக்கலையின் உறைவிடம் என்று கூறலாமா? ஏன் அவ்வாறு கூறலாம் என்பதை விளக்குக. (5 மதிப்பெண்கள்)

Q23. சிற்பங்கள் மூலம் நாம் எவற்றைத் தெரிந்து கொள்ளலாம்? (4 மதிப்பெண்கள்)

Q24. நீ சிற்பியாக எதிர் காலத்தில் விளங்க வேண்டுமென்றால் உன்னிடம் என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்று நீ நினைக்கிறாய்? (6 மதிப்பெண்கள்)

Q25. சௌத் பிரிட்ஜ் மாரியம்மன் கோவில் சிங்கப்பூரின் வரலாற்றுச் சின்னமாக ஏன் பாதுகாக்கப்பட்டு வருகிறது? (6 மதிப்பெண்கள்)

D6 <u>சொற்பொருள்</u> (10 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம் பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை விடைத்தாளில் எழுதுக.

Q26. பறை சாற்றி

Q27. வடிவமைக்கப்பட்டவை

Q28. கைதேர்ந்த

Q29. செம்மையாக

Q30. வரலாற்று

(முற்றும்)

More papers at www.testpapersfree.com

# TESTPAPER 4

Set 4- விடைகள்

சிங்கப்பூரில் நடைபெற்ற ......

Q1. 3 Q2. 4 Q3. 7 Q4. 6 Q5. 1

Q6. . . மாணவர்கள் கலைகளைக் கற்றுக் கொள்ள ஆண்டுதோறும் பல ஆயிரம் வெள்ளிகள் செலவிடப்படுகிறது.

Q7. . . நிலநடுக்கத்தால் அதிகப் பாதிப்பு ஏற்படும்.

Q8. . . கல்வியைக் கற்க முடிவதற்கும் அவனிடம் முயற்சி இருக்க வேண்டும்.

Q9. . . காரணம் அவர் தம் பாடல்களின் வழி மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் வளர்த்ததே ஆகும்.

Q10. . . சிறப்பிக்கப்பட்டவர்கள் கடந்த ஆண்டு தேர்வில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றவர்கள் ஆவார்கள்.

Q11.2 Q12. 8 Q13. 9 Q14. 5 Q15. 10

Q16. 1 Q17. 4 Q18. 2 Q19. 4 Q20. 2

Q21. சிற்பக்கலை காண்பவரின் உள்ளத்தில் பரவசத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதோடு பன்னெடுங்காலம் நிலைத்து நின்று நாகரிகச் சின்னமாகவும் கலை கருவூலமாகவும் போற்றப்பட்டு வருகிறது என்றும் படைத்தவரின் புகழை உலகம் உள்ளவரை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது என்றும் சிற்பக்கலையின் சிறப்பைக் கட்டுரையாசிரியர் சிறப்பித்துக் கூறுகிறார்.

Q22. ஆம் கூறலாம். தமிழ் நாடெங்கும் கட்டப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஆலயங்களில் காணும் சிற்பங்கள் யாவும் காலத்தால் எளிதில் அழிக்க முடியாத கல், உலோகம், மரம் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே தமிழகத்தைச் சிற்பக்கலையின் உறைவிடம் என்று கூறலாம்.

Q23. சிற்பங்கள் மூலம் நாம் பண்டைக்காலப் பண்பாட்டுச் சிறப்புகள், வாழ்க்கை முறை, கலை நுட்பங்கள், புராணக்கதைகள், இதிகாசக் கதைகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

Q24. ஆழ்ந்த இதிகாச அறிவு, மனத்தூய்மை, கணித அறிவு, கைதேர்ந்த ஓவிய அறிவு ஆகியவற்றோடு சோம்பல் இன்மையும் எப்போதும் மன அமைதியுடன் இருக்கும் குணநலனும் என்னிடம் இருக்க வேண்டும்.

Q25. சிங்கப்பூர் கோயில்களுள் பழமை வாய்ந்ததாக இருப்பதோடு பஞ்ச பாண்டவர் கதையை எடுத்துரைக்கும் சிற்பங்களையும், கோவிலின் மேற்கூரையில் நடனக்கலைக்கு எடுத்துக்காட்டாய்த் திகழும் ஓவியங்களையும் தமிழர்களின் கலைநயத்தைச் சிங்கப்பூரில் எடுத்துக்காட்டும் சின்னமாக இருப்பதாலும் சௌத் பிரிட்ஜ் மாரியம்மன் கோயில் சிங்கப்பூரின் வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

Q26. பிறர் அறியும்படி வெளிப்படுத்தி

Q27. உருவாக்கப்பட்டவை

Q28. சிறந்த திறமைமிக்க

Q29. சிறப்பாக

Q30. சரித்திர

More papers at www.testpapersfree.com